சபையின் வல்லமைக்கான இரகசியம்!

செய்தி: சகோ. அகஸ்டின் ஜெபக்குமார்.

கடந்த மாத செய்தியிலே சபையென்பது கண்களுக்குச் தெரியாததும் கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டதுமான வல்லமையினால் நிறைந்த ஒரே மாபெரும் சரீரம் என்பதையும் தானியேலின் புத்தகத்திலே வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி சபையெனப்படுவது கையால் பெயர்க்கப்படாததும் உருண்டோடி வந்து உலகத்தின் இராஜியங்களைத் தகர்த்து பூமியை நிரப்பி தானென்றும் நிலைத்திருக்கிற மாபெரும் வல்லமையைக்கொண்டது என்பதையும் தியானித்தோம். அந்த மகத்தான சபையைச் சேர்ந்த அங்கங்கள் நாமென்பதை உணரும்போது ஒரு மகத்தான புத்துணர்ச்சி நமக்குள் பொங்கியெழுந்து அந்த திருச்சபையின் நாயகன் கிறிஸ்துவிற்காக வீறுகொண்டுசெயல்பட நம்மைத் தட்டியெழுப்பிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தொடர்ந்து இம்மாதம் சபையின் வல்லமைக்கான இரகசியம் என்கிற தலைப்பிலே தியானிக்கக் கர்த்தர் நமக்குதவுவாராக!.

அகற்றநினைத்தவர்களை அகற்றிப்போட்ட ஆண்டவர்!

அன்றைக்கு ரோம சாம்ராஜ்ஜியத்தில் இவனை அகற்றும் இவனை அகற்றும் சிலுவையில் அறையும் என்று இயேசுவைக்குறித்து கூக்குரலிட்டார்கள். அதைப்போல இன்றைக்கும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களை குடும்பத்தைவிட்டு அகற்று.. சமுதாயத்தைவிட்டு அகற்று என்று கூக்குரலிடுகிறார்கள். ஆனால் அகற்றவேண்டுமென்றவர்கள்தான் அகன்று போனார்களேயொழிய கிறிஸ்துவையும், அவரைத் தலையாகக்கொண்ட மகத்தான சபையையும் உலக சரித்திரத்திலிருந்து இன்றுவரை அகற்றமுடியவில்லை. மாறாக உலகசரித்திரத்தை அவரைக்கொண்டே கணக்கிடுமளவு மையமான பிரதான இடத்தை சுதந்தரித்துக்கொண்டார். சாபத்தையே இலாபமாக மாற்றி தன்னை அறையப்பயன்பட்ட சிலுவையைக் கொண்டே மகத்தான இரட்சிப்பை சுதந்தரித்துக்கொடுத்த இரட்சநாதர் அல்லவா நம் ஆண்டவர்.

மேலும் நம் ஆண்டவர் தனது சொந்த இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபையாகிய நம்மை எப்படி தமக்குமுன் நிறுத்தவிரும்புகிறாரென்பதை எபேசியர் 5:25 ல் இருந்து வாசிக்கலாம்.

…அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து,
26. தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர்முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்,
27. கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

சபையின் வல்லமை, அதன் பரிசுத்தத்தில்!

சபையை கறைதிரை பிழையற்றதாய் மாசற்றதாய் தமக்குமுன்பாக நிறுத்துவதே இயேசுக்கிறிஸ்து தன்னைத்தானே ஒப்புக்கொடுத்ததற்கான பிரதான நோக்கமாகும். ஆம்.

சபையின் வல்லமையே அதனுடைய பரிசுத்தத்தில்தான் உள்ளது. (The power of the church lies in its purity). பரிசுத்தத்தை அலங்காரமாகத் தரித்திருந்தால்தான் சபையைக்குறித்து ஜனங்களுக்குள் பயமுண்டாகமுடியும். உங்கள் சபையைக்குறித்து மற்றவர்களுக்குப் பயமுண்டாகவேண்டுமென்று விரும்புகிறீர்களா?.. அப்போஸ்தலர் ஐந்தாம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். பேதுருவிடம் பொய்சொன்ன அனனியாவும், சப்பீராளும் அங்கேயே விழுந்து செத்தார்கள். அதைப்பார்த்த மற்றவர்களுக்குள் சபையைக்குறித்த பெரிதான பயமுண்டாயிற்று. ஏனெனில் பொய்க்கும் மாய்மாலத்திற்கும் சபைக்குள் இடமில்லை என்பதை சபை சரித்திரத்தின் முதலத்தியாயத்திலேயே கர்த்தர் தெள்ளத்தெளிவாய்ச் சொல்லிவிட்டார். அல்லேலுயா.

அன்றைக்கு மாத்திரமல்ல, இன்றைக்கும் கர்த்தர் தம்முடைய சபையைக்குறித்தும் அதிலே பரிசுத்தம் நிலவவேண்டுமென்பதைக்குறித்தும் மிகவும் கரிசனையாயிருக்கிறாரென்பதை கடந்தசில மாதங்களுக்குமுன் உண்மையில் நடந்தவொரு சம்பவத்தைக்கூறிவிளக்குகிறேன். ஒரு சபையிலே தேர்தல் நடந்தது. அப்போது அந்த சபையின் உறுப்பினர் ஒருவர் சபைக்குள்ளேயே கடினமான வார்த்தைகளைச்சொல்லி சண்டைபோட ஆரம்பித்தார். அந்த சபை ஆவிக்குரிய காரியங்களிலே எந்தளவிற்கு முதிர்ச்சிபெற்ற சபை என்பது எனக்குத் தெரியாது. ஆனாலும் அப்படிப்பட்ட சபையைக்குறித்தே ஆண்டவர் அத்தனை கரிசனையுள்ளவராயிருந்தாரென்பது மாத்திரம் நடந்த காரியத்தை அறிந்தீர்களானால் உங்களுக்குப் புரியவரும். சபைக்குள்ளே கலாட்டா செய்ய வந்த அந்த நபர் ஆக்ரோஷமாக, என்ன செய்கிறேன் பார்!.. என்று கையைத் தூக்கியதுதான் தாமதம், பொட்டென்று அங்கேயே விழுந்து செத்துப்போனார். அதற்குப்பிறகு தேர்தலிலே கலாட்டாவாவது ஒன்றாவது. எல்லாரும் கப்சிப்பென்று பெட்டிப்பாம்பாய் அடங்கிவிட்டார்கள். இந்த பயம் எங்கிருந்துவந்தது?.. எங்கே பரிசுத்தம் மேன்மை பாராட்டப்படுமோ அங்கே பயம் தானாக வந்துவிடும். அனனியாவும் சப்பீராளும் விழுந்து மடிந்ததற்குப் பிறகு சபையைக்குறித்த பயம் ஜனங்களைப் பற்றிப்பிடித்தது மாத்திரமல்ல, ஒருவரும் அப்போஸ்தலரைச் சேரத்துணியவில்லை என்றும் ஆனாலும் ஜனங்கள் அவர்களை மேன்மைப்படுத்தினார்களென்றும் வேதம் சொல்லுகிறது. ஆனாலும் இன்றைக்கிருக்கிற அநேக சபைகள்மீது கர்த்தர் நீடியபொறுமையுள்ளவராய் இருக்கிறார். அந்தப்பொறுமையை இலாபமாக கருதாமலிருப்போமாக.

பரிசுத்தம்! பரிசுத்தம்!!

தமிழ்நாட்டின் திருச்சபையே!.. இன்றைக்கு இருக்கிற சட்டங்கள், சூழ்நிலைகள் மற்றும் எதிர்ப்புகளின் மத்தியிலே, சபையைக்குறித்த விழிப்புணர்வு மற்ற மக்களைப் பற்றிப்பிடிக்கவேண்டுமானால் நாம் ஏதோ எதிர்ப்புத் தெரிவிப்பதாலோ, கருப்புச் சட்டை அணிந்து ஊர்வலம் நடத்துவதாலோ, உண்ணாவிரதம் இருப்பதாலோ அல்ல. எந்த மனிதனும் மேலான அதிகாரத்திற்குக் கீழ்ப்படியவேண்டுமென்பதே வேதம் கற்றுத்தரும் பாடம். ஆனால் நாம் செய்யவேண்டியதோ பரிசுத்தத்தையே அடையாளமாக்கி, பரிசுத்தத்தை மேன்மைப்படுத்தி, பரிசுத்தத்திற்கு முதலிடம் கொடுத்து இனி பரிசுத்தமாய் வாழ்வோம்.. பரிசுத்தத்தைக் காப்போம்.. அசுத்தத்திற்கு இடமில்லை, மாய்மாலத்தை சபையைவிட்டு அகற்றுவோம் என்று வீறுகொண்டெழும்போது மற்றமக்கள் சபையைக் கண்டு நடுங்க ஆரம்பிப்பார்கள். *ஆம், இன்றைய தமிழக திருச்சபைகளின் அத்தியாவசியத்தேவை பரிசுத்தம்! பரிசுத்தம்!! பரிசுத்தமே!!.*

(textbox) தலைமைத்துவத்திலிருக்கிற அநேகருக்கும் பரிசுத்தத்தைக் குறித்த அக்கறை இல்லாமல்போய்விட்ட காலக்கட்டத்திற்குள் வந்திருக்கிறோம். பிரதர்! பரிசுத்தத்தைக்குறித்து சற்று கண்டித்துப்பேச ஆரம்பித்தால் சபைக்கு வருகிற கொஞ்சநஞ்ச ஆட்களும் போய்விடுவார்களே என்கிறார்கள். அப்படிப்போகிறவன் போகட்டும். வேதம் சொல்வதென்ன?.. பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.. அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருந்துவிட்டுப்போகட்டும்.

கிறிஸ்துவிற்குள் எனக்கு அருமையானவர்களே! இந்தச் செய்தியை வாசிக்கிற உங்களை பரிசுத்தம் பற்றிப்பிடிப்பதாக!.. பரிசுத்தத்தைக்குறித்த வாஞ்சை உங்களுக்குள் பெருகுவதாக!.. அரசர்களையும் பாமரர்களையும்கூட நடுங்கவைக்கும் வல்லமை பரிசுத்தத்திற்கு உண்டு. அற்புதங்களா?.. அடையாளங்களா?.. அதை விக்கிரகத்தை வணங்குகிறவர்களும் செய்வார்கள்.. ஏனெனில் கடைசி நாட்களிலே அற்புதங்களைச் செய்யும் பிசாசின் ஆவிகள்மூலம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படத்தக்கதாய் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வார்கள் என்றும் அநேகர் அவர்களைப் பின்பற்றி மோசம்போவார்களென்றும் வேதம் நம்மை எச்சரிக்கிறது. இதற்காக நான் அற்புதங்களை எதிர்ப்பவனல்ல, நம்பாதவனல்ல. கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அற்புத அடையாளங்கள் அன்றாட நிகழ்ச்சிகள். அதைப்போல ஜீவனுள்ள தேவனை அறியாத அவர்கள் ஆவிக்குரியவர்களைக் காட்டிலும் வைராக்கியமாக ஆராதனை செய்வார்கள்.. மிகச்சிறப்பாக சமூகசேவை தொண்டு செய்வார்கள். பெருங்கூட்ட ஜனத்தைக்கூட்டுவார்கள். எல்லாக்காரியமும் அவர்களால் கூடும். ஆனால் ஒரேயொரு காரியத்தை அவர்களில் எவரும் செய்யமுடியாது.. அதைத் தரவோ, சொல்லவோ உச்சரிக்கவோ நம் கர்த்தரைத் தவிர வேறுயாருக்கும் தைரியமோ தகுதியோ இல்லை. நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்! என்று சொல்வதற்கு இந்தபூமியிலே எந்த மனிதனுக்கும், வேறு எந்தக் கடவுளுக்கும் தகுதியில்லை, இல்லை, இல்லவேயில்லை. அசுத்தத்திற்கல்ல, உங்களை பரிசுத்தத்திற்கென்றே அழைத்திருக்கிறேன் என்று அறைகூவுகிற ஆவியானவர் உண்டோ.. இல்லை.. இல்லை ஒருபோதும் இருக்கப்போவதும் இல்லை. ஏனென்றால் பரிசுத்தத்திற்கும் அவர்களுக்கும் சம்பந்தமேயில்லை அல்லவா?

கர்த்தரின் வல்லமை வெளிப்படும் இடம், சபை!

அந்த பரிசுத்ததேவன் வாசம்செய்வதால்தான் சபை ஒரு மேற்கொள்ளும் சக்திவாய்ந்ததென்றும் பாதாளத்தின் வாசல்கள் ஒருநாளும் சபையை மேற்கொள்ளமுடியாது என்பதையும்கூட சென்றமாத செய்தியிலே தியானித்தோம். மேலும் கர்த்தர் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணி அதை உலகிற்கு வெளிப்படுத்தும் ஸ்தலம் சபையென்பதையும் நாம் மறந்துபோகக்கூடாது. அநேக நேரங்களிலே சத்துருவின் கண்களுக்குத் தெரிவதுகூட நமது கண்களுக்குத் தெரிவதில்லை. இஸ்ரவேல் மக்களை சபைக்கு முன்னோடியாகவும் அடையாளமாகவும் நிழலாட்டமாகவும் கர்த்தர் வைத்திருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். அடிமைத்தனவீடாகிய எகிப்திலிருந்து விடுபட்டு புறப்பட்டு வந்த அந்த சபையாகிய ஜனத்தை சபிக்கும்படி பிலேயாம் என்கிற மனிதனை பாலாக் ராஜா கூலிக்கு அமர்த்தினான். பொருளாசையினால் பீடிக்கப்பட்ட அந்த பிலேயாம் இஸ்ரவேல் மக்களைப் பார்த்துச்சொன்ன அந்தக்காரியங்கள் இன்றைக்கும் தேவனுடைய

திருச்சபையில் அங்கமாயிருக்கிற நமக்கும் பொருந்தும். ஏண்ணாகமம் 23: 8,9 மற்றும் 22- 24 வசனங்கள்.

தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி?.. கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?
கன்மலையுச்சியிலிருந்து நான் அவனைக் கண்டு குன்றுகளிலிருந்து அவனைப் பார்க்கிறேன்: அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருப்பார்கள்.
தேவன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். காண்டாமிருகத்திற்கொத்த பெலன் அவர்களுக்கு உண்டு!

மேற்கண்ட வசனங்கள் ஏதோ ஒரு தனிமனிதனைக்குறித்துச் சொல்லப்பட்டவை அல்ல, சபையைக்குறித்தே சொல்லப்பட்ட வார்த்தைகள்.

காண்டாமிருகம் ஒரு சுத்தமான சைவப்பிராணி. புல்லைச்சாப்பிடுகிற அதற்கே இந்தளவிற்குப் பெலன் இருக்குமானால் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கிற நமக்கு எவ்வளவு பெலன் இருக்கவேண்டும். மேலும் கர்த்தருடைய ஜனங்களைச் சபிக்கும்படி கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களே இந்த வார்த்தைகளைச் சொல்கிறார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். ஆனால் நமக்குத்தான் அநேகநேரங்களில் நமது பெலத்தைக்குறித்த சரியான அறிவு இருப்பதில்லை. ஆகவேதான் அவர்கள் இப்படிச் சொல்லிவிட்டார்களே.. இவர்கள் இப்படிச் செய்துவிட்டார்களே.. என்றுசொல்லி ஒரேபுலம்பலாய்ப் புலம்புகிறோம். நமக்குக் காண்டாமிருகத்திற்கொத்த பெலன் உண்டென்று சத்துருவிற்குத் தெரிந்திருக்கிற காரியம் ஏன்தான் நமக்குத் தெரியவில்லையோ?.. அவன் தொடர்ந்து சொன்ன காரியங்களை வாசிப்போமா?..

யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை. தேவன் என்னென்ன செய்தாரென்று கொஞ்சக் காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும்.
அந்த ஜனம் துஷ்டசிங்கம்போல எழும்பும், பாலசிங்கம்போல நிமிர்ந்துநிற்கும்: அது தான் பிடித்த இரையைப் பட்சித்து, வெட்டுண்டவர்களின் இரத்தத்தைக் குடிக்குமட்டும் படுத்துக் கொள்வதில்லை என்றான்.

ஐயா, படுத்துக்கொண்டிருக்கிற இந்த சிங்கத்தைத் தொட்டால் சிலிர்த்து எழுந்துநிற்கும். ஆகவே இப்போது நடைபெறுகிற காரியங்கள் தேவஜனமாகிய அந்தசிங்கத்தைத் தொடுவதுபோல் இருப்பதற்காக அவைகளுக்கு நன்றி! இதுதான் தேவன் தமது சபையைக்குறித்து வைத்திருக்கிற திட்டமான தீர்மானம். இது பழைய ஏற்பாட்டுக் காரியங்களாயிற்றே.. புதிய ஏற்பாட்டில் சபையைக்குறித்து என்னசொல்லப்பட்டிருக்கிறதென்று அறிந்துகொள்ள விரும்புவீர்களானால் வாசியுங்கள். 1 கொரி 3:16-17

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?..
ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக்கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.

இந்த வசனங்களும் சரீரத்திற்கு ஒப்பிடப்பட்டுப்பேசினாலும் இவை சபையைக்குறித்த கண்ணோட்டத்திலேயே பேசப்பட்ட வார்த்தைகள் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இந்த வசனங்களை நாம் மறந்துபோய்விட்டோம். உனக்கெதிராய் வரும் ஆயுதங்கள் வாய்க்காதேபோம். ஒருவழியாய் வருவார்கள் ஏழுவழியாய் திரும்பப் ்போவார்கள் என்கிற தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் மறந்துவிட்டோம். அதுதான் தேவன் சபைக்குத் தந்திருக்கிற வல்லமையின் சுதந்திரமாக்கும். சபைக்கென்று தேவன் வைத்திருக்கம் வல்லமையும் மகிமையும் நமது எல்லா எதிர்பார்ப்புகளைக் காட்டிலும் மேலானதென்பதை நாம் அறியவேண்டும். அத்தனை பிரியத்தையும் கரிசனையும் தேவன் தன் சபையின்மீது வைத்திருக்கிறார். ஆதனால்தான் சபையைத் தனது மணவாட்டி என்றழைக்கிறார். இன்னும் வசனத்தினடிப்படையில் சொல்லப்போனால் ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டி! இதை நன்றாய் விளங்கிக்கொள்ளும்படி ஒரு வசனத்தை வாசிப்போம் வெளிப்படுத்தின விசேஷம் 19: 7வது வசனம்.

சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, *அவருடைய மனைவி* தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக்கேட்டேன்.

என் மனைவிக்குக் கல்யாணம்!..
இங்கே ஆண்டவர் சொல்லுகிறதைக் கொஞ்சம் உற்றுப்பாருங்கள். ஆட்டுக்குட்டியானவராகிய கிறிஸ்து தன் மனைவியாகிய சபையை மணமுடிக்கிறாராம். மனைவிக்குக் கல்யாணம்!.. என்று யாராவது சொல்வார்களா?.. தமிழ்நாட்டுப் பாரம்பரியத்திற்கு இது முரண்பாடாகத் தோன்றினாலும், எங்களுடைய பீகாருக்குத்தான் இது முற்றிலும் பொருந்தும். அப்படி இங்கே என்னசெய்வார்கள் தெரியுமா?.. தொடர்ந்து வாசியுங்கள், புரியவரும்.

பீகாரிலே கல்யாணம் முடிந்ததும் மாப்பிள்ளை உடனே பெண்ணைக்கூட்டிக்கொண்டு போய்விடுவதில்லை. அவளைத் தாய்வீட்டியே விட்டுவிட்டுச் செல்கிறான். அதற்குப்பிறகு இரண்டாவது ஒரு கலியாணம் நடககும் அதில்தான் மாப்பிள்ளை மேளதாளத்தோடு ஆடல்பாடலோடு தன் வீட்டாருடன் வந்து பெண்ணை தன்வீட்டுக்கு அழைத்துச்செல்வான். அப்படிப்போகும்போது, எதற்காகப்போகிறாய்?.. என்று மணமகனைக் கேட்டால் அவன் 'என் மனைவியை அழைத்துவரச் செல்கிறேன்!' என்பான். பெண்ணைக்கேட்டாள் அவள், என்னை அழைத்துச் செல்ல என் கணவன் வருகிறார்! ஏன்பாள். இதைப்போலத்தான் இயேசுக்கிறிஸ்து வந்தார்.. தன் சொந்த இரத்தத்தை சிந்தி என்னை மீட்டு அடையாளமிட்டு தனதாக்கிக்கொண்டுவிட்டார்.. நான் இனி என்னுடையவனல்ல, என்னுடையவளல்ல எல்லாம் நீரே என்று சொல்லவைத்துவிட்டார்.. எனக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணிவைத்தபின்பு

மீண்டும் வரப்போகிறார். அப்படி வரப்போகிறதினால்தான் நான் அவருக்கு மனைவி! என் மணவாளனாகிய கிறிஸ்துவும் மனைவியே! என்றுதான் என்னைப் பாசம்பொங்க அழைக்கிறார்.

மணவாட்டியாகிய திருச்சபையே! உங்களது பரம மணவாளர் ஏதோ போனால்போகிறதென்று தன்னால் முடிந்ததைச் செய்கிறவரல்ல, அவரே வானத்தையும் பூமியையும் தன் வார்த்தையினால் படைத்த சர்வவல்லவர். தனது மணவாட்டிக்காக தன் உயிரையே காணிக்கையாய்க்கொடுக்கத் தயங்காதவர்! அவர் முற்றும்முடிய நம்மை இரட்சிப்பது அதிக நிச்சயமல்லவா?.. அந்த பரம மணவாளனுக்கென்று சபையாகிய நாம் நியமிக்கப்பட்டிருக்கிற படியால் கறைதிரை பிழை முதலானவைகள் சற்றுமில்லாமல் நம்மை பரிசுத்தமாகத் தனக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தன்னோடுகூட எப்போதும் வைத்துக்கொள்வதற்கும் கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறபடியால் இன்றைக்கும் இந்த உலகத்தில் நம்மை பலவிதமான சூழ்நிலைகள் மத்தியிலும் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார். நான் அவர்களுக்குள் உலாவி அக்கினி மதிலாயிருந்து காப்பேனென்று வாக்குத்தத்தம் செய்தவரல்லவா?.. இந்த தைரியம் எங்களுக்கிருப்பதினால்தான் பீகாராகட்டும், இந்த உலகத்தின் எவ்வளவு கடினமான பகுதியாயிருந்தாலும், எந்த தீவிரவாதிகள் நிறைந்த இடமாக இருந்தாலும் தயங்காது வீறுகொண்டு அவருக்காக செயல்படவைக்கிறது. அல்லேலூயா!!

சபையின் வல்லமை தேவபிரசன்னத்திலேயே!

பிரியமானவர்களே நம் சபை எதினால் விசேஷித்தது?.. ஆவியானவர் அசைவாடுவதினாலேயே. அவரை வேண்டாமென்று சொல்லி வெளியேவிட்டுக் கதவைச் சாத்தினவர்களும் உண்டு. அப்படிப்பட்டவர்களை ஆண்டவரும் வேண்டாமென்று ஒதுக்கித்தள்ளிவிட்ட அனுபவங்களும் உண்டு. சபையின் வல்லமை அதற்குள் வாசம்செய்கிற பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தினாலேயே என்பதை நாம் ஒருபோதும் மறந்துபோய்விடக்கூடாது. ஆனால் அவர் பரிசுத்தசபையில்தான் அசைவாடுவார். பரிசுத்தத்ததிற்கு இடமில்லாத எந்த சபையிலும் ஒருவேளை அதில் இசைக்கருவிகளின் ஆர்ப்பாட்டம் இருந்தாலும், வார்த்தை ஜாலங்கள் இருந்தாலும் கர்த்தர் அசைவாடுவதில்லை. நான் உலகமுழுவதிலும் இருக்கிற பலவிதமான சபைகளுக்குச் சென்று பிரசங்கித்திருக்கிறேன். சிலநேரங்களில் எந்த இசைக்கருவியோ மின்னணுக்கருவிகளின் விந்தைஜாலங்களோ இல்லாத சிறியசபைகளில் தேவபிரசன்னத்தை உணர்ந்த அளவிற்கு பகட்டான எல்லா சாதனங்களும் வசதிகளும் நிறைந்த சபைகளில் நான் உணரவில்லை. அப்படிப்பட்ட சபைகளில் ஆலயத்தின் சத்தம் அலறலைப் போல இருந்தது. சோதித்துப்பாருங்கள் உங்கள் சபைகளில் தேவபிரசன்னம் நிறைந்து காணப்படுகிறதா?.. நான் ஒருகேள்வியை ஆண்டவரிடத்தில் அநேகநாட்கள் கேட்டுக்கொண்டிருந்தேன். “ஏன் ஆண்டவரே! இவர்களும் உம்மைத்தானே ஆராதிக்கிறார்கள்.. உம்மைத்தானே வணங்குகிறார்கள்.. ஆனால் உம்முடைய பிரசன்னத்தை மாத்திரம் உணரமுடியவில்லையே.. ஆவியானவரின் அசைவாடுதல் இல்லையே?.. இந்தக் கேள்வியைக் கேட்ட எல்லாநேரங்களிலும் கர்த்தர் எனக்குத்தந்த ஒரேபதில், “நான் அங்கே அருவருப்பைக் கண்டிருக்கிறேன்”.. என்பதுதான். வுசதி வாய்ப்புகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தேவபிரசன்னத்தை உணரவேண்டும், ஆவியானவரின் அசைவாடுதல் வேண்டும் நாம் வாஞ்சிப்போமானால் சபையிலே பரிசுத்தம் நிலவ பாடுபடுவேன் என்று தீர்மானம் எடுப்போம்.

ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களைப்பார்த்துச் சொல்லுகிறார். அவர்கள் தங்களை நடத்திவந்த கர்த்தரை மறந்து, பொன்கன்றுக்குட்டியைச் செய்து குடித்துப் புசித்து ஆடிப்பாடி அதுதான் கர்த்தருக்குப் பண்டிகை என்று கொண்டாடினார்கள். தேவகோபம் அவர்கள்மேல் கடந்துவந்தது. அதன்பின் கர்த்தர் சொன்னார். நான் அவர்களோடு எடந்து செல்லமுடியாது. அவர்களுக்காக நான் செங்கடலைப்பிளந்தது உண்மை.. கன்மலையைப் பிளந்து தண்ணீரை நதியைப்போல ஓடிவரச்செய்தது உண்மை.. மாராவின் கசந்த நீரை மதுரமாக மாற்றியது உண்மை.. மன்னாவைப்போஷித்தது உண்மை.. ஆனால், இப்போதோ அவர்களது பரிசுத்தமற்ற நடவடிக்கைகளால், பரிசுத்தமற்ற நடனங்களால்.. அவர்களோடு நான் கடந்துபோகமுடியாது. அப்போது மோசே கர்த்தரைநோக்கிக் கதறி. “ஆண்டவரே! நீர் அவர்களது பாவங்களை மன்னிப்பீரானால் மன்னித்தருளும்.. இல்லாவிட்டால் ஜீவபுத்தகத்திலிருந்து என்பேரைக் கிறுக்கிப்போடும் என்று மன்றாடுகிறான். அப்போது ஆண்டவர் மன்னித்தேன் என்றுசொன்னாலும், நான் எனது தூதனை எனக்குமுன்பாக அனுப்புகிறேன்.. என்றுதான் சொன்னாரேயொழிய நான் உங்கள்முன்பு கடந்துபோவேன் என்று சொல்லவில்லை. காரணம் நீங்கள் பரிசுத்த தெய்வத்தை மறந்துபோனீர்கள்.. ஆடலுண்டு.. பாடலுண்டு.. கர்த்தருக்குப்பண்டிகை என்கிற வாசகமுமுண்டு.. அவர்களுக்காக பரிந்துபேசி மன்றாடுகிற மோசேயும் உண்டு. ஆனால், நான் கர்த்தர் விரும்புவதோ சபையின் மத்தியில் சுத்திகரிக்கும்படியாய் பற்றியெறிகிற பரிசுத்தஅக்கினி. அந்த சுத்திகரிப்பின் அக்கினி எல்லா சபைகளிலும் கடந்துசெல்ல இடமளிக்கப்படுமானால், பரிசுத்தம் மேன்மைபடுத்தப்படுமானால், அதன்பின் பரிசுத்த தேவபிரசன்னம் தடையின்றிக் கடந்துவரும். சபை வீறுகொண்டெழும், சபையைக்குறித்த பயம் எல்லாரையும் பற்றிப்பிடிக்க தேவஜனம் எல்லாரிடமும் மேன்மை பெற்றிருக்கும். மகத்தான அந்தக்காரியங்களைக் கர்த்தர் செய்யும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை. முழங்கால் யாவும் முடங்கும்! நாவுகள் யாவும் இயேசுவே தேவன் என்று அறிக்கையிடும். அல்லேலூயா!